# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 15 செவ்வாய்க்கிழமை 30.12.2025 கதிர் 424



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
யாழ் முற்றம்
Yarl Muttram
Youtube Channel






## சிறை வைத்தியசாலையில் டக்ளஸ் அனுமதி

கொழும்பு, டிச. 30

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் முன்னாள் அமைச்சருமான டக்ளஸ்தேவானந்தா சிறைச்சாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அதன்படி, அவர் மஹர சிறைச்சாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் ஜகத் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

2001 ஆம் ஆண்டு அவரது தனிப்பட்ட பாவனைக்காக இராணுவத்தால் வழங்கப்பட்ட கைத்துப்பாக்கி ஒன்று, 2019 ஆம் ஆண்டு பாதாள உலகக்குழு உறுப்பினரான மாகந்துர மதூஷிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது கண்டெடுக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய விசாரணைகளுக்காகவே டக்ளஸ் தேவானந்தா கடந்த 26 ஆம் திகதி குற்றப்புலனாய்வுத்திணைக்களத்தால் கைது செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணத்தில் 4 கிலோ கஞ்சாவுடன் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் கைது!

## பொலிஸார் அதிரடி நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிச. 30

வெளிநாட்டில் இருந்து வந்த உத்தரவுக்கு அமைய யாழ்ப்பாணத்தில் கஞ்சா போதைப்பொருளைக் கடத்திச் சென்ற நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நபர் ஒருவர் போதை வியாபாரி ஒருவரிடம் கஞ்சா போதைப்பொருளை கைமாற்றம் செய்யப் போதைப்பொருளுடன் பயணிப்பதாக யாழ்ப்பாணம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் நல்லூர் சங்கிலியன் பூங்காவுக்கு அண்மையாக வைத்து அந்த நபரை மடக்கிப் பிடித்துக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபரிடம் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையில், அவரது உடைமையில் இருந்து 4 கிலோ கிராம் கஞ்சா போதைப்பொருளைப் பொலிஸார் மீட்டனர்.



அதனையடுத்து அவரைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்த வேளை தான் நல்லூர் பிரதேச சபையின் உறுப்பினர் எனவும் , வெளிநாட்டில் இருந்து வந்த ஒப்பந்தம் ஒன்றின் அடிப்படையில், ஒரு நபரிடம் இருந்து இதனைப் பெற்று, யாழ். நகர் பகுதிக்கு வரும் ஒருவரிடம் அதனைக் கையளிக்கச் சென்றார் எனவும் கூறினார்.

மேற்படி நபரைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ள அதேவேளை, மேற்படி நபரிடம் கஞ்சா போதைப்பொருளைக் கொடுத்தவர் மற்றும் அதனை வாங்கக் காத்திருந்தவர் தொடர்பிலும் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## கடலில் மூழ்கி மாயமான இளைஞர் சடலமாக மீட்பு!



யாழ்ப்பாணம், டிச. 30

யாழ்ப்பாணம், தாளையடி கடலில் நண்பர்களுடன் நீராடச் சென்ற நிலையில் காணாமல்போன இளைஞர், இரண்டு நாள்களின் பின்னர் சடலமாகக் கரையொதுங்கியுள்ளார்.

உடுத்துறையைச் சேர்ந்த உதைப்பந்தாட்ட வீரரான 27 வயதுடைய ஜெசிந்தன் என்ற இளைஞரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

7➤

## வயோதிபத் தாய் கொடூரக் கொலை!

### கண்டியில் கொடூரம்




கண்டி, டிச. 30

கண்டி, பல்லேகெலே, குண்டசாலை பகுதியில் உள்ள வீடு ஒன்றில் வயோதிபத் தாய் ஒருவர் கை, கால்கள்

7➤



### தையிட்டி விகாரை அமைந்துள்ள காணி மக்களுடையது!

## அதனை அவர்களிடம் மீள வழங்குங்கள் என்று நாக விகாரையின் விகாராதிபதி கோரிக்கை

யாழ்ப்பாணம், டிச. 30

"தையிட்டி திஸ்ஸ விகாரை அமைந்துள்ள காணி பொதுமக்களுடையது. அதனை அந்த மக்களுக்கே வழங்க வேண்டும் என்பதே எனது நிலைப்பாடு. அதனை நான் அரசுக்கும் கூறியுள்ளேன்."

7➤



# நுரைச்சோலையின் இரண்டு மின்பிறப்பாக்கிகள் செயலழப்பு

கொழும்பு, டிசெ.30

நுரைச்சோலை லக்விஜய அனல் மின்நிலையத்தின் இரண்டு மின் பிறப்பாக்கிகள் திருத்தப்பணிகள் காரணமாக தற்போது செயலிழந்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது. இதன் காரணமாக தேசிய மின் கட்டமைப்பிற்கு 600 மெகாவாட் மின் கொள்ளளவு தற்போது இழக்கப்பட்டுள்ளதாக அதன் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

லக்விஜய மின்நிலையத்தின் ஒரு மின் உற்பத்தி இயந்திரம் மாத்திரமே தற்போது இயங்கி வருவதுடன், அதன் மூலம் 300 மெகாவாட் மின்சாரம் தேசிய கட்டமைப்பிற்கு இணைக்கப்படுகிறது.

வழமையான பராமரிப்புப் பணி காரணமாக கடந்த நவம்பர் மாதம் 3ஆம் திகதி ஒரு இயந்திரம் நிறுத்தப்பட்டிருந்தது. கடந்த 20ஆம் திகதி ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக மற்றுமொரு இயந்திரத்தையும் செயலிழக்கச் செய்ய வேண்டியேற்பட்டதாக மின்சார சபை சுட்டிக்காட்டியது.

தற்போது அந்த இரண்டு இயந்திரங்களினதும் திருத்தப்பணிகள் இடம்பெற்று வருவதுடன், எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் வாரத்திற்குள் அவற்றை மீண்டும் மின் உற்பத்திக்கு பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், நீர் மின் உற்பத்தி வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுவதால் அன்றாட மின் விநியோகத்திற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என இலங்கை மின்சார சபை மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

# நிபந்தனைகள் மீறினால் அலைவரிசைகளின் உரிமம் ரத்து – சிவப்பு எச்சரிக்கை விடுத்த அமைச்சர்!



தொலைக்காட்சி அலை வரிசைகளுக்கு ஊடக அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள ஒளிபரப்பு அனுமதிப் பத்திரங்கள் குறிப்பிட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டவையே ஆகும் என அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அந்த நிபந்தனைகள் மீறப்படும் பட்சத்தில், சம்பந்தப்பட்ட அலைவரிசைகளின் அனுமதிப்பத்திரத்தைத் திரும்பப் பெறுவதற்கு அமைச்சருக்கு முழு அதிகாரம் உள்ளதாகவும் அவர் எச்சரித்துள்ளார்.

சுகாதார தகவல் பரப்பலுக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட ஊடகவியலாளர்களை கௌரவிக்கும் நிகழ்வில் சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் இடம்பெற்ற உரையின் போதே அமைச்சர் இதனைத் தெளிவுபடுத்தினார்.

மேலும், ஒவ்வொரு தொலைக்காட்சி நிலையத்திற்கும் வழங்கப்படும் ஒளி பரப்பு அனுமதி தற்காலிகமானதுதான் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ஐ)

# விகாரையை தாக்க எம்.பிக்கள் சிலர் முயற்சி: அர்ச்சுனா

*வடக்கைபிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் வடக்கில் உள்ள ஒரு விகாரையை ஜனவரி 3 ஆம் திகதி தாக்கி வகுப்புவாத கலவரத்தை உருவாக்க திட்டமிட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ராமநாதன் அர்ச்சுனா தெரிவித்துள்ளார் என எமது சகோதர இணையத்தளங்களில் ஒன்றான டெயில் மிரர் செய்தி வெளியிட்டுள்ளது.*

*“விகாரையைத் தாக்கி வகுப்புவாத வன்முறையைத் தூண்டுவதே திட்டம்” என்று அவர் கூறினார்.*

*வடக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தமிழர்களின் மனதை மூளைச்சலவை செய்து பிரிவினைவாதத்தை ஊக்குவிக்க முயற்சிப்பதாக அவர் கூறினார்.(ஐ)*



# சிறுமி டினோஜாவின் மரணத்தில் மருத்துவ தவறு இருப்பின் தண்டனை வழங்கப்படவேண்டும் ரவிகரன் எம்.பி வலியுறுத்து

சிறுமி டினோஜாவின் சந்தேகத்திற்கிடமான மரணத்திற்கு நீதியான விசாரணை மேற்கொள்ளப்படவேண்டுமெனத் தெரிவித்த வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், மருத்துவர் உள்ளிட்ட மருத்துவமனை ஊழியர் சிலரின் அசமந்த போக்கு மற்றும் முறையற்ற மருந்து வழங்கல் என்பன சிறுமியின் மரணத்திற்கு காரணமாக இருப்பின் உரியவர்கள் முறைப்படி தண்டிக்கப்படவேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார்.




சிறுமி டினோஜாவின் மரணத்திற்கு நீதி கோரி இன்று முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு முன்பாக இடம்பெற்ற கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்ககண்டாறு தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையில் உள்ள மாவட்ட பொது மருத்துவ மனைகளிலேயே முல்லைத்தீவும் மன்னாரும் தான் மிகவும் பின்தங்கி இருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது மாவட்ட பொது மருத்துவமனையிலாவது சிறந்த மருத்துவ வசதி காணப்படவேண்டும். ஆனால் முல்லைத்தீவும் மன்னாரும் இன்றுவரை ஏனைய மாவட்ட மருத்துவமனைகளுக்கு நிகராக இல்லை. வளங்களில் இன்னமும் சமத்துவமற்ற நிலையில் உள்ளன.

எங்களின் பிள்ளை டினோஜாவின் மரணம் ஏற்றுக்கொள்ள இயலாதது. மருத்துவமனைக்கு உள்ளும் புறமும் பலராலும் மருத்துவமனை மீதான முறைப்பாடுகள் முன்வைக்கப்படுகின்றன. அதிக அளவாக மருந்து பிள்ளைக்கு வழங்கப்பட்டமையே மரணத்துக்கு காரணம் என பலரும் குற்றஞ்சாட்டுகின்றனர்.

பிள்ளையின் மரணத்துக்கான நீதியான விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும். மருத்துவர் உள்ளிட்ட மருத்துவமனை ஊழியர் சிலரின் அசமந்த போக்கு, முறையற்ற மருந்து வழங்கல் காரணமாக இருந்தால் அவர்கள் முறைப்படி தண்டிக்கப்படவேண்டும்.

ஒவ்வொரு பிரச்சினை நிகழும் போது அது தொடர்பில் பணிப்பாளரோடு கதைக்க முனைந்தால் அவர் கொழும்பில் இருக்கிறார் என்ற தகவல் வருகிறது. மருத்துவர்கள் தொலைபேசி வழியில் மருந்துகளை பரிந்துரைக்கிறார்கள் என்ற முறைப்பாடு பல சந்தர்ப்பங்களில் கிடைக்கப்பெறுகின்றது.

இறுக்கமற்ற நிருவாக நடைமுறை மேற்படி மருத்துவமனையில் நிலவுவதாக உள்ளிருந்தும் சில முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன.

முன்னைய காலங்களில் இருந்த பணிப்பாளர்கள் மிகவும் பற்றுறுதியோடு பணிபுரிந்தனர். ஒரு மரணமேனும் நிகழ்ந்துவிடக்கூடாது என இரவுபகலாக உழைத்தனர். இப்போதுள்ள நிருவாகம் அந்த இறுக்கமான நடைமுறைகளில் இருந்து விலகிவிடுகிறதோ என எண்ணத்தோன்றுகிறது.

இங்கு கூடியிருக்கிற அவ்வளவு மக்களும் ஓரிருவர் தூண்டுதலால் வந்து சேர்ந்தவர்கள் அல்ல. ஒவ்வொரு சந்தர்ப்பத்தின் போதும் அசமந்தப்போக்கோடு மருத்துவ சேவை வழங்கப்படுவதில் அனுபவப்பட்டு இந்தப்பிள்ளையின் மரணத்திலும் அத்தகைய பிழை ஏற்பட்டிருக்கும் என ஆழமாக நம்புகிறார்கள்.

அரசு இதில் உடனடியாகத் தலையிட்டு நீதியான விசாரணை நடைபெற வழிவிடவேண்டும். தவறிழைத்தவர்கள் தண்டிக்கப்படவேண்டும். உணவு ஒவ்வாமையால் ஒரு மரணம் சம்பவிக்கிறது என்பதை எங்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

வீட்டில் இருந்தும், விடுதியில் இருந்தும் தொலைபேசி வழியில் மருத்துவம் பார்ப்பது இங்கு அதிகரித்திருப்பதாக மக்கள் முறையிடுகின்றனர்.

தமது நோய் நிலைமைகளைக் குணப்படுத்தவேண்டுமென்ற நோக்குடனேயே வைத்தியசாலைக்கு மக்கள் வருகை தருகின்றார்களேதவிர, உயிரிழப்பதற்கு மக்கள் இங்கு வருகைதருவதில்லை.

ஆனால் இந்த மருத்துவமனையில் தொடர்சியாக இடம்பெற்றுவரும் இவ்வாறான சந்தேகத்திற்கிடமான மரணங்களால் மாஞ்சோலை வைத்தியசாலையை மரணச்சோலையை என மக்கள் கூறுகின்றனர். இந்த சந்தேகத்திற்கிடமான மரணத்திற்கு நீதிகிடைக்கவேண்டுமென உரியதரப்பினரை வலியுறுத்துவேன். இந்த மரணத்திற்கு நீதிகோரி பாராளுமன்றிலும் எனது குரல் ஒலிக்கும்.

இந்த சந்தேகத்திற்கிடமான மரணத்துடன் தொடர்புடைய மருத்துவரைப் பாதுகாப்பதற்கான செயற்பாடுகளும் இடம்பெற்றுவருவதாகவும் பலரும் எம்மிடம் தெரிவிக்கின்றனர்.

வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியசாலையில் இருப்பதில்லை என்ற முறைப்பாடுகளும் கிடைக்கின்றன. தமது வீடுகளில் இருந்துகொண்டு தமது செயற்பாடுகளை மேற்கொள்கின்ற வைத்தியசாலைப் பணிப்பாளர்கள் இங்கு இருக்கத் தேவையில்லை.

அசமந்தப்போக்கான வைத்தியசாலைச் செயற்பாடுகளில் மாற்றங்கள் கொண்டுவரப்படவேண்டும். இந்த சந்தேகத்திற்கிடமான மரணத்திற்கும் நீதி கிடைக்கவேண்டும் என தெரிவித்துள்ளார். (ஐ)

# படிக்கட்டுக்கள் இல்லாமல் ஏணியில் ஏறி பயணம் செய்யும் மக்கள் உயிர் பயத்தில் நுவரெலியா மக்கள்







கொழும்பு, டிசெ.30

நுவரெலியா - ஹட்டன் பிரதான வீதியை அண்மித்த பகுதியில் ஏற்பட்ட மண்சரிவினால்

மூன்று குடும்பங்களை சேர்ந்த 16 பேர் பயணிப்பதற்காக படிக்கட்டு இல்லாமல் ஏணிகளில் பயணம் செய்வதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவம் நடந்து சுமார் ஒரு மாதத்திற்கு மேலாகியும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதன்படி, ஹட்டன் பிரதான வீதியை அண்மித்த பகுதியில் ஏற்பட்ட மண்சரிவினால் அப்பகுதி மக்களின் நடைப்பாதை முற்றாக சேதமடைந்துள்ளது. இதனால் பயணிப்பதற்கு படிக்கட்டுக்கள் இல்லாமல் அதற்கு பதிலாக இரண்டு ஏணிகளை பயன்படுத்தி வருகின்றதாக தெரியவருகிறது.

பாதுகாப்பற்ற இந்த நடைபாதை காரணமாக குறித்த பகுதியில் உள்ள மக்களின் தினசரி வாழ்க்கையை பாதிக்கப்படுவதாகவும், பாடசாலை மாணவர்கள், முதியவர்கள் மற்றும் பெண்கள் குறித்த ஏணியில் ஏறி பயணிப்பது ஆபத்தானது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தற்காலிகமாக வைக்கப்பட்டுள்ள இரும்பு ஏணி, மழைக் காலங்களில் வழுக்கும் அபாயம் கொண்டுள்ளது, யாராவது தவறி கீழே விழுந்தால் உயிர்சேதம் ஏற்படவும் வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது.

எதிர்வரும் நாட்களில் மழை பெய்தால் இந்த பகுதியில் மண் அரிப்பு ஏற்பட்டு, மண் மற்றும் கற்பாறைகள் இடிந்து விழும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு பலமுறை முறைபாடு செய்தும் அதிகாரிகள் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அத்துடன், பாதுகாப்பாக வீடுகளுக்கு பயணம் செய்வதற்கு பாதைகள் அமைத்து தரும்படியும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

# வடக்கு, கிழக்கில் இன்று பலத்த மழை கடும் காற்று மின்னல் தொடர்பில் எச்சரிக்கை

*வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் மாத்தளை, நுவரெலியா மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழைபெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.*

*இந்தப் பிரதேசங்களின் சில இடங்களில் 50 மி.மீ-க்கும் அதிகளவான பலத்த மழை பெய்யக்கூடும். கண்டி மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களில் அடிக்கடி மழை பெய்யக்கூடும்.*

*சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களிலும் களுத்துறை மாவட்டத்திலும் பிற்பகல் 2.00 மணிக்குப் பின்னர் சில இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும்.*

*மத்திய மலைநாட்டின் கிழக்குச் சரிவுப் பகுதிகளிலும் ஹம்பாந்தோட்டை, மொனராகலை மற்றும் அம்பாறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்திற்கு சுமார் 40 கி.மீ வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும்.*

*சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் அதிகாலை வேளையில் மூடுபனி நிலை காணப்படலாம்.*

*காங்கேசன்துறை தொடக்கம் திருகோணமலை ஊடாக பொத்துவில் வரையான கடல்பிராந்தியங்களின் சில இடங்களில் மழை பெய்யக்கூடும்.*

*கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்திற்கு 30 - 40 km வேகத்தில் வடகிழக்குத் திசையில் இருந்து காற்று வீசும்.*


*கொழும்பு தொடக்கம் புத்தளம் ஊடாக மன்னார் வரையான அத்துடன் ஹம்பாந்தோட்டை தொடக்கம் பொத்துவில் வரையான கரையோரத்திற்கு அப்பால் உள்ள கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்திற்கு 45 - 50 மஅ இலும் கூடிய வேகத்தில் அடிக்கடி காற்று அதிகரித்து வீசக் கூடும்.*

*நாட்டை சூழ உள்ள கடல் பிராந்தியங்கள் இடைக்கிடையே ஓரளவு கொந்தளிப்பான நிலையில் காணப்படும்.*

*இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் தற்காலிகமாக பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடும் என்பதால், அவற்றினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்களை வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.* (ஐ)

# தமிழ்நாட்டில் மீண்டும் அமைய உள்ள திராவிட மாடல் 2.0 அரசு பெண்களுக்கான அரசாகத்தான் இருக்கும்:

## மேற்கு மண்டல திமுக மகளிர் அணி மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி





தமிழ்நாட்டில் மீண்டும் அமைய உள்ள திராவிட மாடல் 2.0 அரசு பெண்களுக்கான அரசாகத்தான் இருக்கும் என்று மேற்கு மண்டல திமுக மகளிர் அணி மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி அளித்து உள்ளார். திருப்பூர் மாவட்டம் பல்லடம் காரணம்பேட்டையில் நேற்று நடந்த ‘வெல்லும் தமிழ் பெண்கள்’ என்னும் திமுக மகளிர் அணி மேற்கு மண்டல மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் திருப்பூர், கோவை, நீலகிரி, ஈரோடு, கரூர், நாமக்கல் ஆகிய 6 மாவட்டங்களில் உள்ள 35 சட்டமன்ற தொகுதிகளில் ஒவ்வொரு வாக்குச்சாவடியில் இருந்தும் தலா 15 பேர் வீதம் மொத்தம் 12 ஆயிரத்து 380 வாக்குச்சாவடிகளில் இருந்து சுமார் 1.5 லட்சம் மகளிர் கலந்து கொண்டனர். மாநாட்டிற்கு திமுக துணை பொதுச்செயலாளர் கனிமொழி எம்பி தலைமை தாங்கினார்.

மாநாட்டில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரையாற்றி பேசியதாவது:

பெண்கள் இப்படி ஒரே இடத்தில் கூடியிருப்பது, வரலாற்றில் வேறு எங்கும் நடந்திருக்காது. உங்களை பார்க்கவே ஒரு பவர்புல் ஆக இருக்கிறது. பெண்கள் பவரில் திமுக மீண்டும் பவருக்கு வரப்போகிறது என்பது உறுதியாகி இருக்கிறது. கனிமொழி, கவிஞர், பத்திரிகையாளர்கள், மரபு கலைகளில் ஆர்வம் கொண்டவர் என பன்முக தன்மை கொண்டவர். புன்னகை மாறாத முகம் கொண்டவர். அதே வேளையில், நாடாளுமன்றத்தில் சிங்கம்போல் கர்ஜிக்க கூடியவர். தேர்தல் என வந்துவிட்டால், திமுக தேர்தல் அறிக்கையில், முக்கிய பங்காற்றுவார். ஒவ்வொரு தேர்தலிலும், திமுக தேர்தல் அறிக்கைதான் எப்போதும் ஹீரோ. அந்த ஹீரோவை தயாரிக்கும் பொறுப்பை அவர் இப்போதும் ஏற்றுள்ளார். கடந்த நாடாளுமன்ற தேர்தலின்போதும் அவர்தான் தேர்தல் அறிக்கை தயாரித்து கொடுத்தார், வெற்றியும் பெற்றோம். அதுபோல், வரும் சட்டமன்ற தேர்தலிலும் அவர் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் பொறுப்பை ஏற்றுள்ளார். நாம் மீண்டும் வெற்றி பெறுவோம்.

இப்போது இந்த மாநாடு எதற்கு? என சிலர் கேட்கிறார்கள். பெண்களின் முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம். பெண்களின் வெற்றியே நாட்டின் வெற்றி. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரது வழியில் நாம் நடைபோடுகிறோம். திராவிட இயக்கத்தால் பெண்கள் அடைந்த வளர்ச்சியை, நீங்கள் எல்லோரும் மற்ற பெண்களுக்கு எடுத்துச்சொல்ல வேண்டும். பெண்கள் படிக்க கூடாது, அடுப்படியை தாண்டி செல்லக்கூடாது என்றார்கள். ஆண்களை சார்ந்து மட்டுமே இருக்க வேண்டும் என அடிமைப்படுத்தினார்கள். அதை எல்லாம் உடைத்தது திராவிட இயக்கம்தான்.

இது மட்டுமா? தேவதாசி முறையை ஒழித்தோம். சட்டம் போட்டு பெண்களுக்கு சொத்துரிமை பெற்று தந்தோம். பெண்களின் கல்வி உரிமை, சமூக உரிமைக்கு நாம் போராடி இருக்கிறோம். அதனால்தான் இவ்வளவு தூரம் பெண்கள் முன்னேறி இருக்கிறார்கள். மற்ற மாநிலங்களை ஒப்பிடும்போது, தமிழ்நாட்டில் பெண்களின் முன்னேற்றம் பலமடங்கு உயர்ந்துள்ளது. கடந்த வாரம் பெண்கள், மொபைல் போன் பயன்படுத்தக்கூடாது என ராஜஸ்தானில் சில குழுக்கள் தடை போட்டனர். ஆனால், நம்ம ஊரில் ஆப்பிள் போன் அசெம்பிள் செய்கிறதே பெண்கள்தான். திராவிட இயக்கம் செய்த புரட்சியின் விளைவுதான் மகளிர் இந்த அளவுக்கு முன்னேற்றம் அடைந்துள்ளார்கள். இன்று எல்லா கட்சியிலும் பெண்கள் பங்கு உள்ளது. அதற்கும், நாம் ஏற்படுத்திய விழிப்புணர்வுதான் காரணம்.

வளர்ந்த நாடுகளில்கூட பெண்களுக்கான போதிய பிரதிநிதித்துவம் இன்னும் கிடைக்கவில்லை. ஆனால், தமிழ்நாட்டில், உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 33 சதவீதம் இடஒதுக்கீடு கொண்டு வந்தார் கலைஞர். இது, நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் இப்போது 50 சதவீதமாக உயர்ந்துள்ளது. இந்த இடஒதுக்கீட்டையும் நாம்தான் கொண்டுவந்துள்ளோம். அதனால், தமிழ்நாட்டில் இப்போது பெண் மேயர்கள் தான் அதிகம். இந்த அதிகாரம், சட்டமன்றத்திலும், நாடாளுமன்றத்திலும் கிடைக்க வேண்டும் என நாம் போராடி வருகிறோம். இதுதான், திமுகவில் லட்சியம்.

இந்த கோரிக்கையை வலியுறுத்தி தலைநகர் டெல்லியில் 2017ல் போராட்டம் நடத்தினோம். ஒட்டுமொத்த இந்திய பெண்களின் குரலாக நாடாளுமன்றத்தில் கனிமொழி பேசினார். தேவையே இல்லாத நிபந்தனையோடு, பெண்களுக்கான 33 சதவீத இடஒதுக்கீடு மசோதாவை ஒன்றிய பா.ஜ அரசு நிறைவேற்றி உள்ளது. அதுவும், எப்போது நடைமுறைக்கு வரும் என சொல்ல முடியாத நிலை உள்ளது. “ஆபரேஷன் சக்சஸ், பேசண்ட் டெட்” என்பார்கள். அதுபோல், ஒன்றிய பா.ஜ அரசின் செயல்பாடு உள்ளது.

பெண்களுக்கு சட்டமன்றத்திலும், நாடாளுமன்றத்திலும் அதிகாரம் கிடைப்பதை பாரதிய ஜனதா விரும்பவில்லை. அதனால், பெயரளவுக்கு இந்த மசோதாவை நிறைவேற்றி உள்ளார்கள். ஆனால், தமிழ்நாட்டில் பெண்களுக்கான ஆட்சி நடக்கிறது. இந்த கூட்டத்தில் எனது தாய்போல் நிறைய பேர் இருக்கிறார்கள். எனது சகோதரி போல் நிறைய பேர் இருக்கிறீர்கள். எனது மகள்களாக நிறைய பேர் இருக்கிறீர்கள். உங்கள் எல்லோருக்கும் எது தேவை என பார்த்து, பார்த்து திட்டம் உருவாக்கி உள்ளோம். இன்னும் உருவாக்கி வருகிறோம்.

நாம், பெண்களின் முன்னேற்றத்துக்கு நிறைய பணி செய்துள்ளோம். அதை சொன்னால் நாட்கள் போதாது. ஆனாலும், இந்த மாநாட்டின் வாயிலாக சில முக்கியமான திட்டத்தை மட்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன். கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, மகளிர் விடியல் பயணம், புதுமை பெண் திட்டம். இந்த திட்டங்கள். இந்த திட்டங்கள் நிறைய பெண்களுக்கு தன்னம்பிக்கை கொடுத்துள்ளது. நிறைய பெண்கள் சுயதொழில் துவங்குகிறார்கள். அவர்களின் பொருளாதாரம் உயர்ந்து இருக்கிறது. பள்ளிகளில் மாணவர்களுக்கு வழங்கபடும் காலை உணவு திட்டதால் வீட்டு பெண்களின் சமையல் அறை சுமையை குறைத்து உள்ளது.

கல்விதான் யாராலும் திருட முடியாத சொத்து. இதை நான் பலமுறை சொல்லி இருக்கிறேன். அதிலும் ஒரு பெண் கல்வி கற்றால், அந்த குடும்பத்தின் நான்கு, ஐந்து தலைமுறையை முன்னேற்ற முடியும். பெண்கள், பத்திரப்பதிவு அலுவலகங்களில் அசையா சொத்து பதிவு செய்யும்போது, பதிவுகட்டணத்தில் ஒரு சதவீதம் தள்ளுபடி வழங்கி உள்ளோம். நமது ஆட்சியில் ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் அபார வளர்ச்சி அடைந்துள்ளது. இதில், சரிபாதி பெண்கள் நடத்துகிறார்கள் என்பதுதான் முக்கியமான விஷயம். ‘டி.என். ரைஸ்’ திட்டமும் வெற்றி பெற்றுள்ளது. இந்த திட்டத்தின்கீழ், அதிகபட்மசாக 13 சதவீதம் பெண்கள் தொழில் முனைவோராக உயர்ந்துள்ளனர். 1989ல் மகளிர் சுயஉதவி குழு துவக்கினோம். கால் வலிக்க வலிக்க பல மேடைகளில் நின்று ஆயிரக்கணக்கான மகளிருக்கு கடனுதவி வழங்கினேன். இப்போது 1 லட்சத்து 39 ஆயிரத்து 560 கோடி ரூபாய் கடன் வழங்கி உள்ளோம். பணிபுரியும் பெண்கள் தங்குவதற்காக இதுவரை 19 தோழி விடுதிகள் உருவாக்கி உள்ளோம். மேலும் பல புதிய விடுதிகள் கட்டி வருகிறோம்.

இதுபோல் இன்னும் நிறைய திட்டங்கள் இருக்கிறது. சொல்ல நேரம் இல்லை. சுருக்கமாக சொன்னால், திராவிட மாடல் ஆட்சி, பெண்களுக்கான ஆட்சி. பெண்கள் முன்னேற்றத்தில், தந்தை பெரியாரின் பதில்தான், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் பதிலும். பெண்கள் முன்னேறினால் தான் ஒட்டுமொத்த சமூகமும் முன்னேறும். பெண்களுக்கான திட்டங்களை, திராவிட மாடல் அரசு போன்று, வேறு எந்த அரசும் செய்திருக்க முடியாது. திராவிட மாடல் 2.0 ஆட்சியில் பெண்களுக்கான திட்டம் இன்னும் விரிவாக்கம் செய்யப்படும். ஆண்கள் வாசல்படி வரைதான் போய் பிரசாரம் செய்ய முடியும். ஆனால், பெண்கள் கிச்சன் வரை செல்லாம். ஒவ்வொரு வீட்டின் பெண்கள் மனதிலும் போக முடியும். நமது திட்டத்தை எல்லாம் ஒவ்வொரு வீட்டுக்கும் கொண்டுபோய் சேர்க்க வேண்டும். இந்த ஸ்டாலின் திராவிட மாடல் ஆட்சி தொடர வேண்டும் என எடுத்துச்சொல்ல வேண்டும்.

மகளிர் அணியின் எல்லோரது பணியையும் நான் உன்னிப்பாக கவனித்துக்கொண்டு இருக்கிறேன். சோசியல் மீடியாவை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். நமது சோசியல் மீடியா பணி இன்னும் பலமடங்கு அதிகரிக்க வேண்டும். நான், கனிமொழிக்கு மட்டும் அண்ணன் அல்ல, உங்கள் எல்லோருக்கும் அண்ணன். திராவிட மாடல் ஆட்சியை அடுத்தக்கட்டத்துக்கு கொண்டுசெல்ல 2.0 ஆட்சி தொடர வேண்டும். அதற்கான பணியை நீங்கள் இப்போதே செய்ய வேண்டும். பல்லடத்தில் ஒலிக்கிற இந்த குரல், தமிழ்நாடு முழுவதும் கேட்கட்டும். வெல்லும் தமிழ் பெண்களே, வெற்றியை தேடி தாருங்கள். அடுத்து அமைய உள்ள திராவிட மாடல் 2.0 ஆட்சி, பெண்களுக்கான ஆட்சியாகத்தான் இருக்கும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

‘88% பெண்களுக்கு வாழ்வளித்த 100 நாள் வேலை திட்டத்தை ஒன்றிய அரசு இழுத்து மூடிவிட்டது’

மகாத்மா காந்தி 100 நாள் வேலைவாய்ப்பு திட்டத்தை ஒன்றிய பா.ஜ அரசு இழுத்து மூடியுள்ளது. கடந்த 4 ஆண்டில் இந்த திட்டத்தில் பயன் அடைந்தவர்களில் பெண்கள் 88 சதவீதம் பேர். பெண்களுக்கு வாழ்வளித்த இப்படிப்பட்ட திட்டத்தை ஒன்றிய பா.ஜ அரசு நிறுத்தியுள்ளது. இதனால், பணப்புழக்கம் அடிவாங்க போகிறது. ஒன்றிய பா.ஜ அரசு பெண்களுக்கு எதிராக செயல்படுகிறது. இதற்கு எடப்பாடி பழனிசாமி ஒத்து ஊதுகிறார். 100 நாள் வேலை திட்டத்தை 125 நாளாக உயர்த்தி உள்ளார்கள் என எடுபிடி பழனிசாமி பச்சை பொய் சொல்கிறார். புதிதாக உருவாக்கி உள்ள இந்த திட்டத்தில் மாநிலங்களின் நிதிச்சுமையை ஏற்றி உள்ளார்கள். இனி, 40 நாட்கள்கூட வேலை கிடைக்குமா? என்ற நிலை உள்ளது. எதையாவது படித்தால்தான் எடப்பாடி பழனிசாமிக்கு புரியும். எதையும் படிக்காமல், கமலாலயம் எழுதி கொடுப்பதை, அப்படியே எடப்பாடி பழனிசாமி படித்துவிட்டு போகிறார்.

தேவதாசி முறையை ஒழித்தோம். சட்டம் போட்டு பெண்களுக்கு சொத்துரிமை பெற்று தந்தோம்.

பெண்களின் கல்வி உரிமை, சமூக உரிமைக்கு நாம் போராடி இருக்கிறோம். அதனால்தான் இவ்வளவு தூரம் பெண்கள் முன்னேறி இருக்கிறார்கள்.

மற்ற மாநிலங்களை ஒப்பிடும்போது, தமிழ்நாட்டில் பெண்களின் முன்னேற்றம் பலமடங்கு உயர்ந்துள்ளது.

கடந்த வாரம் பெண்கள், மொபைல் போன் பயன்படுத்தக்கூடாது என ராஜஸ்தானில் சில குழுக்கள் தடை போட்டனர். ஆனால், நம்ம ஊரில் ஆப்பிள் போன் அசெம்பிள் செய்கிறதே பெண்கள்தான்.



# எமது குழந்தைகளின் எதிர்காலம்: வளமா, வங்குரோத்தா?




குழந்தைகளின் எதிர்காலம் முற்றிலும் அவர்களின் கைகளில் இல்லை அவர்களின் பெற்றோரின் கைகளிலும் இல்லை அவர்கள் வாழும் சமூகத்திடமும் இல்லை. மாறாக, உலகத்தின் ஒவ்வோர் மூலையில் இடம்பெறும் சம்பவங்கள்தான், அவர்களின் வாழ்வில் தாக்கம் செலுத்துமாறு, உலகமும் உலக அரசியலும் மாறிவிட்டன.

உலகமயமாக்கலிலும் அதன் விளைவுகளிலும் தங்கியிருக்க வேண்டும் என்ற தவிர்க்க இயலாததாகி உள்ள நிலையில், எங்கோ நடப்பதன் பக்கவிளைவு, இங்கேயும் உணரப்படுகிறது.

தொடர்ந்து நெருக்கடிக்குள் இருக்கும் உலகப் பொருளாதாரம், உலக அரசியல் ஆதிக்கப் போட்டி, பயங்கரவாதம், ஒருசிலரின் கைகளில் தேங்கும் அபரிமிதமான செல்வம், புதிய தொழில்நுட்ப வடிவங்கள், காலநிலைமாற்ற விளைவுகள் எனப் பலவும் எங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தில், தாக்கம் செலுத்தப் போகின்றன. இவை எங்களது பிள்ளைகளின் எதிர்காலத்தை, எவ்வாறு செதுக்குவன என, இக் கட்டுரை நோக்க விளைகிறது.

'சமூகப் பயனான செயல்' என்பது, சமூகம் வளமுறப் பங்களிப்பதும் எதிர்காலச் சந்ததிக்கு, நலமான உலகை விட்டுச் செல்வதுமே ஆகும். அநியாயங்களுக்கும் அடக்குமுறைகளுக்கும் எதிராக, விடாது போராடுவோர் இதையே மதில் கொண்டுள்ளனர்.

எங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்துக்காகவே நான் எழுதுகிறேன் போராடுகிறேன். இது நம்மில், ஒவ்வொருவரின் வாழ்வியலிலும் தவிர்க்கவொண்ணா ஓர் அம்சமாதல் வேண்டும்.

இருபதாண்டுகளுக்கு முன்னர், உலகம், இப்போது உள்ளபடியேதான் இருக்கும் என்று, எதிர்வு கூறியிருக்க முடியாது. அதேபோலவே, இனிவரும் முப்பதாண்டுகளுக்குப் பிந்திய உலக அரசியல் அரங்கு குறித்து, எதிர்வு கூறுவதும் கடினமாகும்.

ஆனால், அது எத்திசையில் பயணிக்கக்கூடும் எனச் சமகால அரசியல் நிலைமைகளும் நிகழ்வுகளும் நகர்வுகளும் கோடிட்டுக் காட்டுகின்றன.

அமெரிக்க ஆதிக்கம், உடனடியாக முடிவுக்கு வராது. தன் உலக ஆதிக்கத்தைத் தக்கவைத்தல் கடினமாகையால், அது வன்முறை மூலமேனும் அதிகாரத்தைப் பேண முனையும். இது உலகை, இன்றுள்ளதைவிட அதிகளவான வன்முறைக் களங்களைத் திறக்க வைக்கும். போர்கள், ஏன் தொடங்கின என்பது தெரியும் முன்பே, அவை முடிந்துள்ளன எனக் கடந்த பத்தாண்டுகளில் கண்டுள்ளோம் இனியும் அத்தகைய போர்கள் மூளும்.

சீனாவின் பட்டுப் பாதையும் அது சார்ந்த பூகோள அரசியல் நிகழ்வுகளும் உலகில் தாக்கம் செலுத்தும்.

அதேவேளை, அமெரிக்காவுக்கு எதிரான ஓர் ஐரோப்பா சாத்தியமாகி வருகிறது. அமெரிக்க நலன்களுக்கு மாறாக, ஐரோப்பிய நாடுகள் செயற்படும் காலம், தொலைவில் இல்லை.

இது, அமெரிக்க சார்பு எதிர் அமெரிக்க எதிர்ப்புக் கொள்கை வகுப்புப் பிரச்சினையாக, ஐரோப்பியக் கொள்கை வகுப்பாளர்களிடையே எழுவதுடன், ஐரோப்பிய ஒன்றியத்தின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கும்.

இப்போட்டிகளும் ஆதிக்க அவாவும், மூன்றாம் உலகில் எதிரொலிக்கும். எங்கள் பிள்ளைகளின் எதிர்காலம், எங்கள் கைகளில் என ஒதுங்கி நிற்கவியலா வண்ணம், நுண்ணரசியல் எம் வாழ்வைத் தின்னும்.

உலகம் இன்னமும் கொலனியாதிக்கத்தில் இருந்து விடுபடவில்லை. கொலனியம் நவீன வடிவங்களில் தொடர்கிறது. முன்பு கொலனியம் செய்ததை, இப்போது பல்தேசியக் கம்பெனிகள் செய்கின்றன.

மூன்றாமுலக நாடுகளில் உள்ள உழைப்பாளர்கள், நவீன அடிமைகளாகி உள்ளார்கள். அதிகார ஆவல் உலகெங்கும் பரந்து விரிந்துள்ளது. அரசியல் ஓர் ஆயுதமாயுள்ளது. முன்னர் அரசியலுக்குப் பிற விடயங்கள் ஆயுதங்களாய் இருந்தன. இப்போது அரசியலே பிரதான ஆயுதமாகி உள்ளது. இது இன்னும் பலகாலம் தொடரும்.

அரசியல் நீக்கிய, சமூக அக்கறையற்ற, தனிமனித நலன்களை முன்னிறுத்தும் கல்வியையும் வாழ்வியலையும் அரசாங்கங்கள் பிள்ளைகளுக்கு வழங்குகின்றன. இதில் இருந்து, எங்கள் பிள்ளைகளைக் காக்க வேண்டும். இது இன்றும் நாளையும் என்றென்றுக்கும் பெற்றோருக்கான பிரதான சவாலாக இருக்கும்.

வேறுபாடின்றி, அனைத்து அரசாங்கங்களும் கீழ்ப்படிவான குடிமக்களையே விரும்புகின்றன. கீழ்ப்படிவானோரை உற்பத்தி செய்யும் ஆலைகளாகக் கல்விக் கூடங்கள் இருக்கின்றன. இக் கல்விக்கூடங்களிலிருந்து எங்கள் பிள்ளைகளை மீட்பது எப்படி? நீதிக்கும் அநீதிக்கும், சரிக்கும் பிழைக்கும், உண்மைக்கும் பொய்க்கும் இடையில் வேறுபாடு காணத்தக்க அறஞ்சார்ந்த அடிப்படைகளை அறியும் குழந்தைகளை நாம் எவ்வாறு உருவாக்கப் போகிறோம? இவை பெரிய சவால்கள்.

உலகப்பொருளாதாரம், தாராளவாதத்தின் உச்சத்தை அடைந்துவிட்டது. உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற முகவர்கள் மூலம், உலகைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கான விதிகளை, நவதாராளவாதம் நிலைநிறுத்தியுள்ளது.

மூன்றாமுலக நாடுகள் கடனில் தள்ளாடுகின்றன. சமூக நலன்கள் ஒவ்வொன்றாகக் காவுகொள்ளப்படுகின்றன. அனைத்தையும் தனியாரிடம் கொடுத்துவிட்டு, மக்களை ஓட்டாண்டி ஆக்கும் செயலையே அரசாங்கங்கள் நவதாராளவாத முகவர்களின் உதவியோடு செய்கின்றன.

சுத்தமான குடிநீர், இலவசக்கல்வி, இலவச மருத்துவம் என்பன 'முன்பொருகாலத்தில் இருந்தன' என, எங்கள் பிள்ளைகள் வரலாற்றுப் புத்தகங்களில் படிக்கும் அபாயத்தை எதிர்நோக்குகிறோம். அனைத்தையும் பண்டமாக்கி, விலைக்கு விற்கும் சமூகத்தையே, எங்கள் குழந்தைகள் கொண்டிருக்கப் போகிறார்கள்.

நுகர்வுக் கலாசாரம் வாழ்வியலாகி விட்டது. தொலைக்காட்சி விளம்பரங்கள், நிபுணர்களின் கருத்துகள் எனப் பலவும் பல்வேறு கோணங்களில் நுகர்வை ஊக்குவிக்கின்றன.

தொழிற்றுறை, சேவைத் தொழில்களை நோக்கி நகர்கிறது. உணவு, மரபணு மாற்றிய உணவாகிறது. இந்தப் பயிருக்கு, இந்தப் பசளை, இந்தப் பூச்சி கொல்லி என, எமது விவசாயத்தை, பல்தேசியக் கம்பெனிகளே தீர்மானிக்கின்றன. மீள்பாவனைக்கு உதவாத விதைகள், மண்ணையும் மனிதத்துவத்தையும் இயற்கை விவசாயத்தையும் குழி தோண்டிப் புதைத்துள்ளன.

எமக்கான உணவு, அந்த உணவு ஏற்படுத்தும் நோய், அந்த நோய்க்கான மருத்துவம் என அனைத்தும், சுழற்சி முறையில் தீர்மானிக்கப்படுகின்றன. இயற்கையோடு இயைந்த வாழ்வை, எமது பிள்ளைகளுக்கு எவ்வாறு இயலுமானதாக்குவது?

நாங்கள் நான்காவது தொழிற்புரட்சிக் காலத்தில் இருக்கிறோம். இதன்போது, எட்டியுள்ள விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சிகள் வியக்க வைப்பன. இவ் வளர்ச்சி, உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியின் உச்சத்தைக் குறிக்கிறது.

இந்த வளர்ச்சிப் போக்கு, (7ஆம் பக்கம் பார்க்க..)

# சோமாலிலாந்து நாட்டை அங்கீகரிப்பதாக இஸ்ரேல் அறிவிப்பு..!!



முக்கிய பொருளாதார பாதையில் அமைந்துள்ள சோமாலிலாந்து நாட்டை அங்கீகரிப்பதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது. 19ம் நூற்றாண்டின் காலனி ஆதிக்கத்தின் போது ஆப்ரிக்க நாடான சோமாலியாவின் தெற்கு பகுதியில் இத்தாலியன் காலனியாகவும், வடக்குப்பகுதியில் பிரிட்டனின் காலனியாகவும் இருந்தது. காலனி ஆதிக்கத்திற்கு பிறகு 1960ம் ஆண்டில் இந்த இரண்டு பகுதிகள் இணைந்து சோமாலியா என்ற தனி நாடு உருவானது. ஆனால் ஆரம்பம் முதலே சோமாலிலாந்து என அழைக்கப்பட்ட வடக்குப்பகுதி மக்களுக்கு இந்த இணைப்பில் உடன்பாடில்லை. இதனால் ஏற்பட்ட மோதல் உள்நாட்டு போராக மாறியது.

தொடர்ந்து இந்த மோதல் 1990ம் ஆண்டில் உச்சம் அடைந்த நிலையில் சோமாலியாவிலிருந்து தனி நாடாக பிரிவதாக சோமாலிலாந்து அறிவித்தது. இந்த நாட்டுக்கென தனித்த நாணயம், பாஸ்போர்ட், ராணுவம் ஆகியவை உருவானது. எனினும் இந்த நாட்டில் இதுவரை எந்த நாடும் அங்கீகரிக்கவில்லை. அதே நேரம் சோமாலிலாந்துடன் பிரிட்டன், துருக்கி, ஐக்கிய அரபு அமீரகம், டென்மார்க், தைவான் உள்ளிட்ட நாடுகள் தூதரக ரீதியிலான உறவை பேணி வருகின்றன. இந்த நிலையில் சோமாலிலாந்தை தனி நாடாக அங்கீகரிப்பதாக இஸ்ரேல் அறிவித்து அதற்கான அறிவிப்பை கையெழுத்திட்டுள்ளது.

சர்வதேச அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சர்வதேச போக்குவரத்தில் முக்கியத்துவம் வாய்ந்த செங்கடலின் நுழைவு வாயிலான ஏடன் வளைகுடா பகுதியில் இந்த சோமாலிலாந்து அமைந்துள்ளதால் முக்கியத்துவம் வாய்ந்த நாடக இந்த நாடு பார்க்கப்படுகிறது.

அந்த பகுதியில் எந்த நாட்டுடனும் இஸ்ரேலுக்கு பெரிய அளவிலான உறவுகள் இல்லாத நிலையில் இஸ்ரேலின் அறிவிப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது. இஸ்ரேலின் இந்த அறிவிப்புக்கு சோமாலிலாந்து வரவேற்பை தெரிவித்துள்ளதன் மூலம் அந்த பகுதியில் இஸ் ரேலிய முகாம்கள் அமையவும் வாய்ப்புகள் உருவாகி உள்ளன.

இதன் காரணமாக செங்கடல் வணிகத்தை கட்டுப்படுத்தும் வாய்ப்பும் தனது கப்பல்களை தொடர்ந்து தாக்கி வரும் எமனின் ஹொதி அமைப்பின் மீது தாக்குதல் நடத்தும் வாய்ப்பும் இஸ்ரேலுக்கு அமைந்துள்ளது. இஸ்ரேலின் இந்த அறிவிப்புக்கு அரபு லீக் இஸ்லாமிய நாடுகளின் அமைப்பான இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு ஆகியவை கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. அதே நேரம் சோமாலிலாந்தை அங்கீகரிப்பது குறித்து எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் கூறியுள்ளார்.



# ரஷ்யா – உக்ரைன் போர் விரைவில் முடிவுக்கு வரும்: அமெரிக்க அதிபர் டிரம்ப் நம்பிக்கை

" உக்ரைன் - ரஷ்யா போரை முடிவுக்கு கொண்டு வர காலக்கெடு இல்லை என்றாலும், அமைதி திட்டம் இறுதி கட்டத்தில் உள்ளது," என, உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஜெலன்ஸ்கி உடனான சந்திப்புக்கு பின், அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் தெரிவித்துள்ளார்.

கிழக்கு ஐரோப்பிய நாடான உக்ரைன் - ரஷ்யா இடையே நான்கு ஆண்டுகளை எட்டியுள்ளது. இதை முடிவுக்கு கொண்டு வர பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டன.

எனினும் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. அமெரிக்க அதிபர் டிரம்ப், இஸ்ரேல் – காசா போருக்கு முன்மொழிந்த அமைதி திட்டத்தை போலவே, ரஷ்யா – உக்ரைனுக்கும் அமைதி திட்டத்தை முன்மொழிந்தார்.

இதற்கு ரஷ்யா ஒப்புதல் தெரிவித்தது. அதே சமயம், இத்திட்டத்தில் அதிகமான அம்சங்கள் ரஷ்யாவுக்கு ஆதரவாக இருப்பதாக கூறி உக்ரைன் ஏற்க மறுத்தது. இதையடுத்து, அமைதி திட்டத்தில் சிறிய மாற்றங்களை அமெரிக்கா செய்தது. இதற்கு ரஷ்யா எதிர்ப்பு தெரிவித்தது.

இந்நிலையில், அமெரிக்காவின் புளோரிடாவில் அதிபர் டிரம்பை, உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி நேற்று சந்தித்து பேசினார். சந்திப்புக்கு பின், அதிபர் டிரம்ப் கூறியுள்ளதாவது:

அமைதி திட்டம் குறித்த பேச்சில் முன்னேற்றம் ஏற்பட்டு ள்ளது. ஒரு ஒப்பந்தத்தை எட்டுவதில் ஏற்படும் தோல்வி, மோதலை மேலும் நீட்டிப்பதுடன், அதிக உயிரிழப்புக்கும் வழிவகுக்கும்.

நாங்கள் பேச்சின் இறுதி கட்டத்தில் இருக்கிறோம். ஒப்பந்தம் ஏற்படாவிட்டால், இந்த போர் நீண்ட காலத்துக்கு நீடிப்பதுடன், லட்சக்கணக்கான மக்கள் கொல்லப்படுவர்.

ஒப்பந்தம்கையெழுத்தாக காலக்கெடு எதுவும்நிர்ணயிக்கப்படவில்லை. அதே நேரத்தில், அமைதி ஒப்பந்தம் விரைவில் கையெழுத்தாகும் என்று நம்புகிறேன்.இவ்வாறு அவர் கூறினார். (ஐ)



# மெக்சிகோ ரயில் தடம் புரண்டதில் 13 பேர் பலி 100 பேர் காயம்

மெக்சிகோவில்பயணியர்ரயில்தடம்புரண்டு விபத்துக்குள்ளானதில்: வட அமெரிக்க நாடான மெக்சிகோவின் தெற்கு மாகாணமான ஒக்சாகாவில் இந்த கோர விபத்து நிகழ்ந்தது. பசிபிக் பெருங்கடல் துறைமுகமான சலினா குஷரூஸ் முதல், கல்ப் ஆப் மெக்சிகோ துறைமுகமான கோட்ஸகோல்கோஸ் வரை, 'இன்டர்ஓசியானிக்' என்ற ரயில் செல்கிறது.

நேற்று முன்தினம், 241 பயணியருடன் சென்ற அந்த ரயில், நிசாண்டா என்ற இடம் அருகே தடம் புரண்டு விபத்துக்கு உள்ளானது.

வேகமாக சென்ற ரயில் வளைவில் திரும்பியபோது, எதிர்பாராதவிதமாக தடம் புரண்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த விபத்தில், 13 பேர் உயிரிழந்தனர் காயமடைந்த 100 பேரில், ஐந்து பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில் உள்ளனர். மெக்சிகோ அதிபர் கிளாடியா ஷெய்ன்பாம் இந்த சம்பவத்திற்கு இரங்கல் தெரிவித்துள்ளார்.

இவ்விபத்து குறித்து போலீசார் விசாரிக்கின்றனர்.

# கிரேன் 'டெலிவரி'க்கு நீண்ட பயணம் மூன்று பெருங்கடல்களை சுற்றிய சீன கப்பல்



சீனாவைச் சேர்ந்த சரக்கு கப்பல் ஒன்று இந்திய, அட்லாண்டிக் மற்றும் பசிபிக் என மூன்று பெருங்கடல்களை சுற்றி மூன்று மாதங்கள் பயணித்து கிரேன்களை 'டெலிவரி' செய்துள்ளது.

நம் அண்டை நாடான சீனாவில் தயாரிக்கப்பட்ட கிரேன்கள், உலகின் பல துறைமுகங்களில் பயன் படுத்தப்படுகின்றன. இந்நிலையில், 'ஜென் /ஹவா 29' என்ற, 800 அடி நீளமுள்ள சரக்கு கப்பல் ஒன்று, அமெரிக்காவின் கல்ப் கோஸ்ட் மற்றும் வட அமெரிக்க நாடான ஜமைக்காவில் உள்ள துறைமுகங்களுக்கு கிரேன்களை கொண்டு சென்றது.

வழக்கமாக ஷாங்காயிலிருந்து மிசிசிப்பி வரை பசிபிக் பெருங்கடலை கடந்து பனாமா கால்வாய் வழியாக சென்றால், ஒரு மாதத்தில் சென்றடையலாம். ஆனால், இந்தக் கப்பலில் ஏற்றப்பட்ட கிரேன்களின் 'பூம்ஸ்' எனப்படும் நீண்ட கைகள் கப்பலின் பக்கவாட்டில் வெளியே நீண்டு கொண்டிருந்ததால், பனாமா கால்வாய் அதிகாரிகள் அனுமதி மறுத்தனர்.

இதனால்கப்பல்ஆப்பிரிக்காவின்தென்கோடியில் உள்ள கேப் ஆப் குட் ஹோப் வழியாக சுற்றி, நீண்ட பாதையில் செல்ல வேண்டியிருந்தது. ஷாங்காயிலிருந்து ஜூன், 20ல் புறப்பட்ட கப்பல், மொசாம்பிக் கடற்கரையில் சுமார் இரண்டு வாரங்களும், தென்னாப்ரிக்க கடற்கரையில் ஒரு வாரமும் நங்கூரமிட்டு இருந்தது.

பின்னர் ஆகஸ்ட் 14ல் ஆப்ரிக்காவைச் சுற்றிய கப்பல், செப்டம்பர் 11ல் மிசிசிப்பியின் கல்ப்போர்ட் துறைமுகத்தை அடைந்தது. பின்னர் டெக்சாஸ் மற்றும் ஜமைக்காவின் கிங்ஸ்டன் துறைமுகத்தில் கிரேன்களை இறக்கியது.

மூன்று மாதங்களில், 37,000 கிலோமீட்டர் பயணித்து இந்திய, அட்லாண்டிக் மற்றும் பசிபிக் என மூன்று பெருங்கடல்களை கடந்து இந்த கிரேன்கள் டெலிவரி செய்யப்பட்டுள்ளன. கிரேன்களை இறக்கிய பின் வெறுமனே திரும்பியதால், பனாமா கால்வாய் வழியாக குறுகிய பாதையில் ஷாங்காயை இந்த மாதம் வந்தடைந்தது.

## அதனை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்று யாழ். நாக விகாரையின் விகாராதிபதி விமலதர்ம தேரர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இன்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தையிட்டி விகாரை அமைந்துள்ள காணி, பொதுமக்களின் காணி என நீதி அமைச்சர் , ஜனாதிபதி உள்ளிட்ட அரச தரப்புக்களுக்கு நான் தெளிவுபடுத்தியுள்ளேன்.

இந்தப் பிரச்சினையை அரசியலாக்கி முரண்பாடுகளை வளர்க்க வேண்டாம் எனத் தமிழ் , சிங்கள மக்களிடம் கோருகின்றேன்.

காணிகளை காணி உரிமையாளர்களிடம் கையளிக்க வேண்டும்.

அனைவரும் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும் என்பதே என் பிரார்த்தனை.” - என்றார்.

## கடலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேற்படி இளைஞர் கடந்த ஞாயிற்றுக்கிழமை நண்பர்களுடன் தாளையடி கடலில் நீராடிக்கொண்டிருந்த வேளை கடல் அலையில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல்போனார்.

இதனையடுத்து கடந்த இரண்டு நாட்களாக இளைஞரை அந்தப் பகுதியைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள், கடலில் தேடிய நிலையில் இன்று திங்கட்கிழமை அவரின் சடலம் அந்தப் பகுதியில் கரையொதுங்கியுள்ளது.

இது தொடர்பில் மருதங்கேணி பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து, பொலிஸார் சடலத்தை மீட்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வைத்தியசாலையில் சடலத்தை ஒப்படைத்துள்ளனர்.

## வயோதிப...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கட்டப்பட்டுக் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கண்டியில் பல்லேகெலே, குண்டசாலை பகுதியில் உள்ள வீடு ஒன்றில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

87 வயதுடைய வயோதிபத் தாயே கொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வயோதிபத் தாயின் இரண்டு பிள்ளைகள் வெளிநாட்டிலும், ஒரு பிள்ளை வீட்டில் இருந்து சற்றுத் தொலைவிலும் வசித்து வருகின்றனர் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவ தினத்தன்று வயோதிபத் தாயின் மருமகள் வீட்டுக்குச் சென்று பார்க்கும் போது, வயோதிபத் தாய் அந்த கை,கால்கள் கட்டப்பட்டு கொடூரமாகக் கொலை செய்யப்பட்டிருப்பதைக் கண்டு உடனடியாகப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

வீட்டுக்குள் நுழைந்த திருடர்கள் சிலர் வயோதிபத் தாயைக் கொலை செய்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அனர்த்த நிலைமையால் பாதிக்கப்பட்ட மலையக மக்களுக்கு வடக்கில் காணி!

நாட்டில் ஏற்பட்ட அனர்த்த நிலைமையால் பாதிக்கப்பட்ட மலையக மக்களுக்கான நிரந்தர, பாதுகாப்பான காணியை பெற்றுக் கொடுக்கும் மனிதாபிமான நடவடிக்கையை மானிடம் பூமிதான இயக்கம் ஆரம்பித்துள்ளது.

அதன்படி பாதிக்கப்பட்டுள்ள மலையக மக்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் காணி பெற்றுக் கொடுக்கப்படும் எனவும், இதுவரையில் 25 குடும்பங்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் மானிடம் பூமிதான இயக்கத்தின் தலைவர், தேசிய ஒருங்கிணைப்பாளர் பரா.நந்தகுமார் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வசிக்கும் வடக்கு மாகாணத்தை சேர்ந்த கொடையாளர்கள், காணிகளை வழங்க முன்வந்துள்ளதாக குறிப்பிட்ட அவர், யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கு மாகாணத்தில் காணிகள் வழங்கக்கூடிய இடங்கள் தொடர்பிலும் ஆராயப்படுவதாகவும் தெரிவித்துள்ளார். இதேவேளை, மலையகத்தில் பாதுகாப்பான இடங்கள் உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் அங்கு வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பதற்கும் இயலுமான சாத்தியங்கள் குறித்தும் ஆராயப்படுவதாக தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும், இந்த விடயத்தில் எவ்வித அரசியல் தலையீடுகளையும் ஏற்படுத்த இடமளிக்கப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

எனவே, சுயவிருப்பின் அடிப்படையில் வடக்கு மாகாணத்தில் குடியேற முன்வரும் மலையக மக்களுக்கு காணிகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்பில் நாளை விசேட போக்குவரத்து திட்டம் 1,200 பொலிஸார் கடமையில்!



*புத்தாண்டுகொண்டாட்டங்களுக்காககொழும்பு வரும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த பொலிஸார் விசேட போக்குவரத்து மற்றும் பாதுகாப்புத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டுள்ளனர்.*

*2026 புத்தாண்டு கொண்டாட்டங்களுக்காக நாளை (31) கொழும்பு நகருக்கு, வெளி மாகாணங்களில் இருந்து பெருமளவிலான மக்கள் காலி முகத்திடல் பகுதிக்கு வருகை தருவார்கள் என பொலிஸார் எதிர்பார்க்கின்றனர்.*

*எனவே, இதன்போது ஏற்படக்கூடிய போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் பொலிஸார் விசேட போக்குவரத்து மற்றும் பாதுகாப்புத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டுள்ளனர்.*

*புத்தாண்டுப் பிறப்பை முன்னிட்டு குறிப்பாக கொழும்பு கோட்டை, புறக்கோட்டை, கொம்பனித்தெரு, மருதானை, கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி மற்றும் கறுவாத்தோட்டம் ஆகிய பொலிஸ்பிரிவுகளில் கடும்போக்குவரத்து நெரிசல் ஏற்படக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

*எவ்வாறாயினும், நாளை இந்தப் பொலிஸ் பிரிவுகளில் போக்குவரத்து வழமை போல் இடம்பெறும் என்பதுடன், கடும் நெரிசல் ஏற்படும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் தேவைக்கேற்ப பின்வருமாறு போக்குவரத்து மாற்றங்கள் செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*காலி வீதி ஊடாக கொழும்பிலிருந்து வெளியேறுதல் – என்.எஸ்.ஏ சுற்றுவட்டம், காலி வீதி, பாலதக்ஷ மாவத்தை சந்தியில் இடதுபுறமாக (எம்.ஓ.டி சந்தி) திரும்பி, பாலதக்ஷ மாவத்தை, மாக்கன் மாக்கர் மாவத்தை, காலி முகத்திடல் சுற்றுவட்டம் ஊடாக கொள்ளுப்பிட்டி நோக்கிச் செல்ல முடியும்.*

*காலி முகத்திடல் சுற்றுவட்டத்திலிருந்து கொழும்புக்குள் நுழையும் வாகனங்கள் பாலதக்ஷ மாவத்தை சந்தி வரை மற்றும் அதற்கு அப்பால் செல்ல முடியும்.*

*காலி முகத்திடல் சுற்றுவட்டத்திலிருந்து மாக்கன் மாக்கர் மாவத்தை வழியாக பயணித்து பாலதக்ஷ மாவத்தை ஊடாக காலி வீதி நோக்கியோ பயணிக்க முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது.*

*இந்த போக்குவரத்துத் திட்டத்தின் போது கொழும்பு நகரின் நடைபாதைகளிலோ அல்லது பிரதான வீதிகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையிலோ வாகனங்களை நிறுத்த அனுமதிக்கப்பட மாட்டாது.*

*இவ்வாறான போக்குவரத்து விதிமீறல்களில் ஈடுபடும் சாரதிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.*

*போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு கடமைகளுக்காக சுமார் 1,200 பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.*

*கொழும்புக்கு வருகை தரும் வாகனங்களை நிறுத்துவதற்காக விசேட வாகன தரிப்பிட வசதிகள் செய்யப்பட்டுள்ளதுடன், அங்கு சுமார் 5,900 வாகனங்களை நிறுத்துவதற்கான இடவசதிகள் காணப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.*

# எமது குழந்தைகளின்...

விஞ்ஞானத்தின் உதவியுடன் நவீன முறைகளில் சுரண்டுவதை இயலுமாக்குகிறது. இத்தொழில்நுட்ப வளர்ச்சி, சமூகத்தை இலத்திரனியல் முறையில் ஒன்றிணைப்பதன் மூலம், ஒவ்வொரு தனிமனிதனையும் முழுமையாகக் கண்காணிக்க வல்லது. அதன் வழி, சமூகத்தைக் கட்டுப்படுத்தலை மேலும் ஆழமாயும் நுட்பமாயும் விரிவாயும் செய்கிறது.

இப்போது, தானியங்கு தொழில்நுட்பம் செயற்கை நுண்ணறிவு வளர்ச்சி மூலம், புதிய பரிமாணத்தைப் பெற்றுள்ளது. தொழில்கள் தானியங்கலுக்கு உட்படுகின்றன. இதுவரை தானியங்கலுக்குள் உட்புகாத துறைகளில், செயற்கை நுண்ணறிவின் வளர்ச்சி மூலம், தானியங்கல் செயல்முறை வந்துள்ளது.

தொழிற்றுறையும் மருத்துவத்துறையும் முக்கியமானவை. வேறுபாடின்றி, அனைத்துத் துறைகளையும் தானியங்கல் தொழில்நுட்பம் ஆக்கிரமிப்பதால், இலட்சக்கணக்கானோர் வேலையிழக்கின்றனர்.

முரண்நகை ஏதெனில், பிற துறைகளின் ஊழியர்களின் வேலைகளைத் தின்று வளர்ந்த தகவல் தொழில்நுட்பம், இப்போது செயற்கை நுண்ணறிவுத் திறனாலும் தானியங்கல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியாலும் பாரிய வேலையிழப்புகளைச் சந்திக்கிறது.

கவனிக்க வேண்டியது யாதெனில், குறைந்த தொழிலாளர்கள் மூலம் அதிகபட்ச உற்பத்தி, உற்பத்திச் செலவைக் குறைத்தல், உற்பத்தித் திறனை அதிகரித்தல், மனிதர்களை இயந்திரங்களால் மாற்றீடு செய்தல் என்பவற்றைக் கொண்ட முதலாளித்துவ வளர்ச்சிப் போக்கு, மனிதரின் வேலைவாய்ப்பை அழிக்கிறது.

எதிர்காலத்தில், மனிதர்களின் வேலைகளை இயந்திரங்கள் பார்த்தால், மனிதர்களுடைய வேலை என்ன?

அதேவேளை, செயற்கை நுண்ணறிவு வழித் தானியங்கி, மனிதனைப் போல சிந்திக்கவும் செயற்படவும் வல்லது. இது அறஞ்சார்ந்த கேள்விகளை எழுப்புகிறது. இக்கேள்விகள், எங்கள் பிள்ளைகளின் எதிர்காலமும் வாழ்வியலும் தொடர்பானவை.

உதாரணமாக, உணர்ச்சியற்ற தர்க்கரீதியாக மட்டுமே சிந்திக்கத் தெரிந்த இயந்திரத்துடன், மனிதர் உரையாடுவது விசித்திரமானது் அது விசித்திரமானது மட்டுமல்ல, விபரீதமானதும் கூட.

மனிதர் மனிதருடன் உரையாடாது, உணர்வுகளைப் பகிராது, அனைத்தையும் மின்வெளியில் மட்டும் பகிரவும், தமது பிரச்சினைகளின் தீர்வை, இயந்திரங்களிடம் எதிர்பார்த்திருப்பதை வாழ்வாகக் கொள்ளவும் பழகிய ஒருகாலம், எவ்வாறு இருக்கும் என ஒருகணம் யோசித்துப் பாருங்கள். காலநிலை மாற்றத்தின் கொடிய விளைவுகளை எமது காலத்திலேயே அனுபவிக்கிறோம். இது பற்றி அதிகளவில் பேசியாயிற்று. ஆனால், எம்மால் அதைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

புவி வெப்பமடைதலைக் குறைக்கும் நடவடிக்கைகளைச் செயற்படுத்த முடியவில்லை. அதற்கான அரசியல் தைரியமும் சமூகப் பொறுப்பும் எம்மிடம் இல்லை.

“அனைத்தையும் விஞ்ஞான ரீதியாகத் தீர்க்க முடியும்” என்று சொல்லியபடி, மேலும் அதிக கரியமில வாயுவை உமிழ்வித்துப் புவிவெப்பநிலையை ஏற்றியவாறு இருக்கிறோம்.

இனியும் ‘காலநிலை மாற்றம்’ என்று சொல்வதைத் தவிர்த்து, இதைக் ‘காலநிலை நெருக்கடி’ என்றோ, ‘காலநிலை அபாயம்’ என்றோதான் சொல்ல வேண்டியுள்ளது.

இதை மிகவும் தீவிரத்துடன் முன்னெடுக்க வேண்டும். எதிர்காலத் தலைமுறை, காலநிலை மாற்றம் குறித்து, நாம் வாளாவிருந்ததற்கு எம்மைப் பழிசொல்லும். எமது இலாப வெறியும் சுயநலமுமே இன்றுவரை அது பற்றிக் காத்திரமான நடவடிக்கை எடுக்காமைக்குக் காரணம் ஆகும்.

நாம் தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் நாம் எமது எதிர்காலச் சந்ததி மீது, ஒரு மனிதகுலப் பேரவலத்தை நிகழ்த்திக் கொண்டிருக்கிறோம் என்பதை நினைவில் கொள்வோமாக.

எமது குழந்தைகளின் எதிர்காலத்தில் நேரடியாகவும் மறைமுகமாகவும் உலக அரசியல் நிகழ்வுகள், செல்வாக்குச் செலுத்தியே தீரும். பொருளாதாரம் முதல் காலநிலை மாற்றம் வரை, அனைத்தையும் அரசியல் அதிகாரங்களே தீர்மானிக்கும்.

எமது குழந்தைகளின் எதிர்காலத்தை, இலாபவெறி பிடித்த அதிகாரத்துக்காக எதையும் செய்கின்ற மனிதர்களிடம் விடுவதன் ஆபத்தை, நாம் உணர்வோம். அதன் தீய விளைவுகளை, நாம் அனுபவித்துள்ளோம். எமது குழந்தைகளின் எதிர்காலத்தை வளமாக்குவதும் வங்குரோத்தாக்குவதும் எம் கைகளிலேயே உள்ளது.

அநியாயத்துக்கு எதிராகவும் நீதிக்காகவும் நியாயத்துக்காவும் குரல் கொடுப்பதும் போராடுவதுமே எமது பிள்ளைகளுக்காக நாம் செய்ய வேண்டிய முக்கிய பணி. ‘செயல்’ ஒன்றுதான் சிறந்த சொல்.


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது kmஇல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி
கறுவா, மிளகு ஆகிய பயிர்ச்செய்கையும் பராமரிப்பும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்
அருகில் உள்ள நகரங்கள்
Haputala 16km
Diyatalawa 24km
Bandaralawela 27km
Badulla 55km
Nuwara Eliya 58km
Hatton 98km
Hambantota 108km
Pottuvil 129km
Kandy 142km
Colombo 190km
Batticaloa 199km
அருகில் உள்ள விமான நிலையம்
Mattala 84km
Bandaranayake 190km
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


JRIDE
இலங்கையின் பயணிகள் செயலி
SRI LANKA'S
TAXI APP FROM JAFFNA
5%
இப்போது நாம்
இலங்கை முழுவதும்
காத்திருப்புக்கு விடுதலை!
மகிழ்ச்சியான பாதுகாப்பான பயணம் திருப்தியான கட்டணம்!
www.jride.lk